ஸ்ரீ ராமாநுஜன் — 229



சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: **ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.**

ஸம்புடம் **20**	ப்லவங்க௵ தை௴ 1963 ஜனவரி௴ வெளியிடப்பட்டது.	ஸஞ்சிகை **1**

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி—3.

(தஞ்சை மாமணிக்கோயில்.)

ஓதக்கேள் நெஞ்சே! உனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை —போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று. **(3)**

நெஞ்சே! ஓத கேள்	மனமே! உனக்கு நான் சொல்லுமிதனைக் கேளாய்;	போத பேணி	மிகவும் ஆதரித்து
இது உனக்கும் நன்று	நான் சொல்லுவதை ஆதரிப்பது உனக்கும் நன்மை பயக்கும்;	வடிவம் பொருந்து	அப்பெருமானது திருமேனியிற் பொருந்தியுள்ள
எனக்கும் மேதக்க நன்மை இனி வேறு இல்லை	சொல்லுகிற எனக்கும் மிகச் சிறந்த நன்மை இதற்கு மேல் வேறில்லை;	அஞ்சை	பஞ்சாயுதாழ்வார்களையும்
பெரு தஞ்சை மா மணியை	பெருமை பொருந்திய திருத் தஞ்சையில வாழும் மாமணிப் பெருமாளை	மா மணியை	சிறந்த ஸ்ரீ கௌஸ்துபமணியையும்
		போற்று	துதிப்பாயாக.

* * * 'தஞ்சை மாமணிக்கோயில்' என்று ப்ரஸித்தமான சோழநாட்டுத் திருப்பதியைப் பாடும் பாசுரமிது. "**தஞ்ஜாபுரீ**" என்னும் வடமொழிப் பெயர் தஞ்சையாயிற்று. 'நெஞ்சே! கேள்' என்றவிடத்துச் சிறியதோர் ஆராய்ச்சி கேண்மின். "மந: பூர்வோ

வாகுத்தர:'' என்ற சுருதியின்படி நெஞ்சு நினைத்ததை வாய் சொல்லுமேயல்லது நெஞ்சின் உதவியின்றி வாய் சொல்லகில்லாது; ஆகவே, தம்மிற்காட்டில் வேறுபடாத நெஞ்சை வேறுபடுத்தி விளித்துச் சொல்லுவது அஸம்பாவிதமென்று நினைக்க நேரும். உண்மையில் நெஞ்சு தம்மிற்காட்டில் வேறுபட்டதன்றுதான்; ஆனாலும் *மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:* என்று நூற்களில் மனத்திற்கு ஒரு ப்ராதான்யம் கொடுக்கப் பட்டுள்ளது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் *நெஞ்சமே! நல்லைநல்லை யுன்னைப்பெற்றால் என்செய்யோம்* என்றருளிச் செய்கிறார். *முயற்றிசுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாயெம்மொடு நீகூடி* என்றே பெரிய திருவந்தாதியைத் தொடங்குகின்றார். நெஞ்சைத் தூதுவிடுவதும் ப்ரஸித்தமாகவுள்ளது. வடநூலாரும் *நபும்ஸகமிதி ஜ்ஞாத்வா தாம் ப்ரதி ப்ரேஷிதம் மந:, தத் து தத்ரைவ ரமதே ஹதா: பாணிநிநா வயம்* என்று விநோதமாகக் கூறுகின்றார்கள். இதெல்லாம் சமத்காரசாலியான வார்த்தைப்பாடு என்பர்.

நமது வேதத்தில் இரண்டாவது காண்டத்தில் ஐந்தாவது ப்ரச்நத்தில் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் ஒரு விவாதமேற்பட்டதாக உபாக்கியானமொன்று ஓதப்பட்டுள்ளது. அதனைச் சுருக்கமாகக் கேளீர்; [**வாக் ச மநச் ச ஆர்த்தீயேதாம்**] வாக்கும் மநஸ்ஸும் விவாதப்பட்டன. என்னவென்று? என்னில்; [**அஹம் தேவேப்யோ ஹவ்யம் வஹாமீதி வாக் அப்ரவீத்**] தேவதைகளுக்கான ஹவிஸ்ஸை நான் வஹிக்கிறேனென்று வாக்கு உரைத்தது. [**அஹம் தேவேப்ய இதி மந:**] மநஸ்ஸும் அவ்விதமாகவே சொல்லிற்று. விவாதம் ஓயவில்லை; [**தௌ ப்ரஜாபதிம் ப்ரச்நமைதாம்**] விவாதசாந்திக்காக இருவரும் ப்ரஜாபதியிடம் சென்று முடிவுகூற வேணுமென்று கேட்டார்கள். [**ஸோப்ரவீத் ப்ரஜாபதி:**] கேட்கப்பட்ட ப்ரஜாபதி முடிவு சொன்னார். என்ன சொன்னாரென்னில் [**தூதீரேவ த்வம் மநஸோஸி; யத் ஹி மநஸா த்யாயதி தத் வாசா வததீதி.**] வாக்கே! மநஸ்ஸுதான் மேன்மை பெற்றது; அதற்கு நீ பணிவிடை செய்யக் கடமைப்பட்டிருக் கிறாய்; மனஸ்ஸு நினைப்பதைத் தானே வாக்கு சொல்லமுடியும் என்று. இதற்கு மேலும் கதை சிறிது செல்லுகின்றது. அது நிற்க. மனஸ்ஸுக்கு ஒரு ப்ராதாந்யமுள்ள தென்பதை மட்டும் இந்த உபாக்கியானத்தினாலுணர்க.

வடிவில் பொருந்து அஞ்சை = எம்பெருமான் *நாந்தகம் சங்கு தண்டு நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரமெனப்படுகிற பஞ்சாயுதங்களோடு கூடியவனாதலால் அந்த ஐம்படைகளையும் போற்றுமாறு சொல்லுகிறது. அன்றிக்கே எம்பெருமானுடைய ஸ்வரூபம் பரம் வியூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என ஐவகைப்பட்டிருத்தலால் அவ்வைந்தும் விவக்ஷிதமாகலாம். **மாமணியை** = *குருமாமணிப்பூண்குலாவித்திகழுந் திருமார்வனாகையாலே அத்திருமார்வில்திகழும் ஸ்ரீகௌஸ்துபமணியைச் சொன்னவாறு. '**அஞ்சையும மாமணியையும்**' என்று உம்மை கூட்டிக்கொள்ளத்தக்கது. மா—பிராட்டியு மாம். பூதத்தாழ்வாருடையவும் திருமங்கையாழ்வாருடையவும் மங்களாசாஸனம் பெற்ற தலமிது. ... ... (3)

முக்கியமான அறிவிப்பு:—சந்தா செலுத்தாதது காரணமாகப் பத்ரிகை நிறுத்தப் பெற்றவர்கள் 'எமக்குப் பத்ரிகை ஏன் அனுப்பப்படவில்லை?' என்று கேட்கிறார்கள், மேற்கொண்டு பத்ரிகையை விரும்பாவிட்டாலும் பாக்கியுள்ள சந்தாவைச் செலுத்த வேண்டியது அவசியம். (**மானேஜர்.**)

புத்தாண்டு பிறப்பு.

நமது ஸ்ரீராமாநுஜன் பத்தொன்பது பிராயங்களை இனிது கழித்து இன்று இருபதாம் பிராயத்திற் புகுகின்றபடியால் இப்பிராயமும் மேன்மேலும் பிராயங்களும் இனிது செல்லவேணுமென்று எம்பெருமானையும் அவனடியார்களையும் இனிதிறைஞ்சித் தொழுதேத்தலாகிறது. இதன் அங்குரதசையே தொடங்கி எம்பெருமானுடைய நிர்ஹேதுககருணையொன்றுதான் முக்கியமான அவலம்பமாகக் காண்கிறது. ஸ்வயமாகவே ப்ரஸரித்தவதனை நாம் ப்ரார்த்திப்பதென்பது தகுதியன்றாயினும் புருஷார்த்தமாகைக்காக ப்ரார்த்திக்கவும் ப்ராப்தம். நெடுநாளாகவே இதில் ஹ்ருதயபூர்ணமான அபிமானங் கொண்டிருக்கும் ஸஹ்ருதயர்கள் பக்கலிலும் நாம் பிரார்த்திக்கவேண்டியது ஏதுமில்லை.

அடியேனுடைய உடல்நலக்குறைவை அறிந்துள்ள ஆப்தர்கள் பலர் "உடலை நோக்கிக்கொள்ளவேண்டும்" என்று நேரில் சொல்லுவதும் ஸ்ரீமுகங்களில் எழுதுவதுமாகவுள்ளார்கள். 'யாருடைய உடம்பை யார் நோக்கிக்கொள்வது' என்பதே அனைவர்க்கும் அடியேனுடைய உத்தரம். *தழைநல்லவின்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே* என்றநுஸந்தித்து நிற்கிறேன். ... ... ❋

நம் ஸ்ரீ ராமாநுஜன் இருபதாவது பிராயத்தில் புகும் இந்த நன்னாளில் ஸ்ரீ ராமாநுஜரைப்பற்றி

இருபது விசேஷங்களை விஜ்ஞாபிக்கின்றது.

[இராமாநுச நூற்றந்தாதியிலிருந்தும் யதிராஜஸப்ததியிலிருந்தும் யதிராஜவிம்சதியிலிருந்தும்.]

1. **மாறனடிபணிந்துய்ந்தவிராமாநுசனென்று** நூற்றந்தாதி தொடங்குகின்றது. நம்மாழ்வாருடைய திருவடிகளைப்பணிந்து உஜ்ஜீவித்தவரென்று பொருள். அர்ச்சைகளில் எங்கும் நம்மாழ்வாருடைய திருவடிநிலைக்கு நாதமுனிகளென்றோ மதுரகவிகளென்றோ வ்யபதேசமின்றிக்கே **ராமாநுஜனென்றே** ஸார்வத்ரிகமான வ்யபதேசமிருப்பதுகொண்டு இதனையறுதியிடலாம். ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளில் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை யடியொற்றியே அர்த்த விசேஷ நிர்வாஹங்கள் செய்தருளியிருப்பதை அடியேனுடைய **த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வத்தில்** பரக்கக் காணலாம்.

2. நூற்றந்தாதியின் இரண்டாவது பாசுரத்தில் *குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனிராமாநுசன்* என்று திருமங்கையாழ்வார் திருவடிகளில் அன்புமிக்கவரெனப்படுகிறது. நமது ஸம்ப்ரதாயத்தில் **'பராங்குச பரகால யதிவரர்கள்'** என்கிற வ்யபதேசம் ப்ரஸித்தம். நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் எம்பெருமானுர் ஆகிய இம்மூவர்க்கும் ஒரு சேர்த்தியை முன்னோர்கள் செய்து வைத்தார்கள். திருவரங்கம்

பெரியகோயிலில் திருவத்யயநோத்ஸவத்தில் இச்சேர்த்தியை இற்றைக்குங் காணலாம். மற்றையாழ்வாராசாரியர்கள் ஒரு கோவையாயிருப்பர்கள். இம்மூவரும் தனிச்சிறப்புத் தோன்ற நின்றுகொண்டிருந்து முந்துறமுன்னம் மரியாதை பெறுவர்கள். *மாறனடி பணிந்துய்ந்ததும் *குறையல் பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனுயிருந்ததும் ப்ரத்யக்ஷமாகக் காணலாயிருந்தது.

3. **பேரியல் நெஞ்சே** யென்கிற மூன்றும் பாசுரத்தில் அமுதனார் தம்பக்கலில் எம்பெருமானார்க்குப் பெருகின விசேஷ கடாக்ஷப்ரவாஹத்தைப் பேசுவது விலக்ஷண மாகவுள்ளது. அமுதனார் ஸாமாந்ய குலத்தில் பிறந்தவர். தமது தேஹபந்துக்களோடு கூடிவாழ்வதற்கு அவர்க்கு ருசியில்லாமையாலே ஒரு நாள் ஸ்வாமி பக்கலிலே வந்து "நீசனேனைத்திருத்தி இவ்விடத்திற்கு உரியேனும்படி ஸ்வாமி திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, உடனே ஸ்வாமி ஆழ்வானையழைத்து அமுதனாரைக்காட்டி "இவர் கோயில்கொத்தி லுள்ளவர்கட்குத் தலைவராய் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீகார்யத்துக்குப் பரிவராயிருப்பவரென்பது அறிவீரே; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரையநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்மிடத்தே கொண்டுவந்து சேரும்" என்று நியமித்தருள, ஆழ்வானும் அவரை ஆறு மாதம் அநுவர்த்தித்துப் பரிபக்குவராக்கி ஸ்வாமி திருவடிகளிலே கொண்டு வந்து காட்டிக் கொடுக்க, அமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலேயே ஆச்ரயிக்கச் செய்தருளினார் என்பது இதிஹாஸம். இது இப்பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்டிருப்பது.

4. மேலெடுத்த மூன்றும் பாசுரத்தில் *இராமாநுச முனிக்கன்பு செய்யும் சீரிய பேறுடையாரடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கு* என்று ஸாமான்யமாகச் சொன்னதில் த்ருப்தியடையாமல் ***குரும் ப்ரகாசயேத் தீமாந்*** என்ற கணக்கிலே தமக்கு ஸாக்ஷா தாசார்யரான கூரத்தாழ்வான் பெருமையை முன்னிட்டுக்கொண்டு எம்பெருமானாரைத் துதிப்பது **மொழியைக கடக்கும பெரும்புகழா**னென்று தொடங்கும் ஏழாவது பாசுரம். முக்குறும்பாவது—கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச் செருக்கு என்னுமிவை. இவையற்றவர் கூரத்தாழ்வானொருவரேயென்பது ப்ரஸித்தம்.

5. ***தாழ்வொன்றில்லா**வென்கிற பதினாறும் பாட்டில் *சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளலிராமானுசன்* என்றவிடத்து *பெரும்பூதூர் மாமுனிக்குப்பின்னானாள் வாழியே* என்கிற ஆண்டாள்வாழி திருநாமத்திலடங்கியுள்ள இதிஹாஸம் அநுஸந்தேயம். அதாவது, *நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான், நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன், நூறுதடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்* என்ற ஆண்டாள் மனோரதத்தை (எம்பெருமானார்) நிறைவேற்றிவைத்து ஆண்டாள் பக்கலிலே பெற்ற பரிசு.

6. *முனியார் துயரங்கள் முந்திலும், இன்பங்கள் மொய்த்திடினும் கனியார் மனம்......எங்களிராமானுசனை வந்தெய்தினரே* என்கிற பதினேழாம் பாசுரத்தில் எம்பெருமானாரடியார்களின் ஒரு பெருமை சொல்லும் முகத்தால் ஒரு சிறந்த அத்யாத்மப் பொருள் ஸூசிதமாகிறது. எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் ஸுகதுக்கங்கள்

மேலிடுங் காலங்களில் மற்ற ஸம்ஸாரிகளைப்போலே ஹர்ஷ சோகங்களையடையாமல் எவ்வித விகாரமும் அற்றிருப்பர்கள் என்பது பாசுரத்தின் பொருள். ஸ்ரீபாஷ்யத்தில் பக்தி ஸாதனமாக எடுத்துக்காட்டப்படுகிற விவேக விமோக அப்யாஸ க்ரியா கல்யாண அநவஸாத அநுத்தர்ஷங்களென்கிற ஸப்தகத்தில் அநவஸாதமும் அநுத்தர்ஷமுமாகிற இரண்டுமிங்கு நிரூபிக்கப்பட்டனவாயின.

7. ***அடையார் கமலத்தலர்மகள்கேழ்வனென்று** தொடங்கியுள்ள முப்பத்து மூன்றும் பாசுரத்தில் எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதார பூதராகத் தெரிவிக்கப்பட்டுள்ளார். இதையநுஸரித்து யதிராஜ ஸப்ததியிலும் *அப்ருதக் ப்ரதிபந்நயந்மயத்வைர் வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:* என்று பணிக்கப்பட்டது. சேஷாவதார பூதரென்பது ப்ரமாண ஸித்தமாக இல்லையேயென்று சிலர் சங்கிப்பர்கள்: இவை ஸ்தோத்ர நூல்களேயொழிய சரித்திர நூல்களல்ல; திவ்யஸூரிசரிதம்; யதிராஜ வைபவம் முதலான சரித்திர நூல்களில் சேஷாவதாரத்வமே முக்கியமாகக் கூறப் பட்டிருப்பது காண்க. எம்முடைய சேஷாவதாரச் சிறப்பு நூலில் விரிவு காணத்தக்கது.

8. *படிகொண்ட கீர்த்திபிராமாயணமென்னும் பத்திவெள்ளங்குடிகொண்ட கோயிலிராமானுசன்* (37.) என்கிற பாசுரம்—ஸகல இதிஹாஸ புராணங்களுக்குள்ளும் ஸ்ரீராமாயணத்தில் ஸ்வாமி யெம்பெருமானார்க்குண்டான அபிநிவேசாதிசயத்தைக் காட்டுகிறது; ஸ்ரீராமாயணத்திற்கு **பக்திவெள்ள** மென்றே திருநாமஞ்சாற்றினர் அமுதனார். எம்பெருமானார் வைபவத்தில், திருப்பதியிலெழுந்தருளியிருந்த தமது மாதுலரான திருமலைநம்பி பக்கலில் ஒரு ஸம்வத்ஸரகாலமிருந்து ஸ்ரீராமாயணார்த்தம் கேட்டருளினதாகச் சொல்லியிருக்கையாலே அதுதனக்கு ப்ரகாசகமாகவே இப்பாசுரம் அவதரித்ததுபோலும்.

9. [*மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து.* என்கிற நாற்பத்தோராம் பாட்டில் எம்பெருமானுடைய அவதாரத்திற்காட்டிலும் எம்பெருமானாருடைய திருவவதாரம் மிகச் சிறப்புற்றதென்கிறார். ***அஜாயமாநோ பஹுதா விஜாயதே*** என்றும் *உயிரளிப்பான் எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா* என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமான் பலபல யோனிகளில் பலவகைப் பிறவி பிறந்து கண்காண வந்து நின்று உபதேசாதிகளாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்த விடத்திலும் யாரும் அவனைப் பொருள் படுத்தவில்லை; ***அவஜாநந்தி மாம் மூடா:*** [மூடர்கள் என்னை அவமானப் படுத்துகிறார்கள்] என்று தானே சொல்லிவருந்த வேண்டியதாயிற்று. ஆகவே பகவானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளினுடைய தெள்ளறிவுக்கு உறுப்பாகவில்லை. ஸ்வாமியின் திருவவதாரமோ வென்னில், மிக்க பயன் பெற்றது. இவர்தாம் திருவவதரித்தவுடனே எல்லாவுலகத்தாரும் ஆச்சரியமான ஞானத்தைப்பெற்று உஜ்ஜீவித்தார்கள்—என்பது இப்பாசுரத்தின் கருத்து.

10. *உணர்ந்தமெய்ஞ்ஞானியர் யோகந்தொறும் திருவாய்மொழியின் மணந்தரு மின்னிசை மன்னுமிடந்தொறும்* இத்யாதியான அறுபதாம் பாட்டில் ஸ்வாமி யெழுந்தருளியிருக்குமிடங்கள் அற்புதமாகச் சொல்லுகிறது. ஞானம் தலையெடுத்த

மஹான்களின் திரள் எங்கெங்கிருக்கிறதோ அங்கெல்லாமெழுந்தருளியிருப்பர்; திருவாய் மொழியின் பரமபோக்யமான இசை எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கெல்லாம் ஸேவை ஸாதிப்பர்; ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் கோயில் கொண்டிருக்கும் திவ்யதேசங்கள் தோறும் புகுந்து நிற்பர்—என்கிறது இதில். "திருவாய்மொழியின் மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறும்" என்றது இதில் பரமார்த்தமான வார்த்தையாகும். ஸ்வாமி திருவுள்ளமுகந்த பேச்சுக்களில் இது தலையானது.

11. *ஞானங்கனிந்த நலங்கொண்டு.* (66) இப்பாட்டு மிகமிக இன்சுவை யுடையது. அடியார்களுக்கு மோக்ஷமளிக்கிற அதிகாரம் எம்பெருமானுக்கு மட்டுமன்று; எம்பெருமானாருக்கு முண்டு. ஆனால் எம்பெருமான் மோக்ஷமளிப்பது மிகவும் சிரமப்படுத்தியே; எம்பெருமானார் அளிப்பது தம்முடைய நிர்ஹேதுக கிருபையினாலே— என்கிறது இதில். இப்பாட்டின் திவ்யார்த்ததீபிகையுரையில் அடியேன் விரித்துரைத் துள்ளதை ஈண்டெடுத்துக் காட்ட விரும்புகின்றேன். (அதாவது) மோக்ஷமென்கிற வொரு சரக்கு எம்பெருமானாகிற கடையிலும் எம்பெருமானாராகிற கடையிலும் கிடைக்கக் கூடியது; உலகில் கடைகளுக்கு மூன்று விதமான அஸௌகரியங்கள் இருக்கக்கூடும். அவையாவன—சரக்கின் விலையை மிகவும் ஏற்றிச் சொல்லுதல், அந்த விலையில் சிறிதும் குறைக்க இடம்தராமல் **'கறார் விலை'** என்று கட்டளைப்படுத்துதல்: 'அதிக விலையும் கறார் விலையுமாயிருந்தாலும் தற்காலம் கடனாகக் கொடுத்தால் சில நாட்களில் விலை கொடுத்துவிடுவோம்' என்றால் அதற்கும் இசையாமல் 'கடன்கட்டில்லை, கைமேல் விலைகொடுத்தாகவேண்டும் என்று வற்புறுத்தல்—என்பனவாம். இவற்றுக் கெதிர்த்தட்டாக மூன்றுவகையான ஸௌகரியங்களுமுண்டு; லகுவான விலைக்கு விற்றல், கறார்விலை யென்னாமல் பேரம்பேச இடங்கொடுத்தல், கடனாகவுங்கொடுத்தல் என்பன வாம். முன்னே சொன்ன அஸௌகரியங்கள் நிரம்பிய கடையின் ஸ்தானத்தில் எம்பெருமானைக் கொள்ளவேணும். பின்னே சொன்ன ஸௌகர்யங்கள் நிரம்பிய கடையின் ஸ்தானத்தில் எம்பெருமானாரைக் கொள்ளவேணும். எங்ஙனேயெனின்; எம்பெருமான் மோக்ஷமாகிற சரக்குக்கு விலையை அபரிமிதமாக ஏற்றி விதித்துவைத்தான்— *ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடொறும் நையவேண்டுமென்கையாலே இந்த விலை எல்லாரும் எளிதாகச் செலுத்தமுடியாதாகையால் விலை அபரிமிதமென்பது தெரிந்தது. இதில் சிறிது குறைத்துக்கொள்ளலாமோ? என்றால் இசைகிறானில்லை; ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்க்கே வானங்கொடுப்பேனென்கிறான்; ஆகவே பேரம்பேச முடியாத தன்மையாயிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இவ்விருள்தருமா ஞாலத்திலுண்டாவது அருமையாதலால் 'எங்களை முன்னடி மோக்ஷத்திற்கு அனுப்பிவிடு, அங்குப்போய் இந்த விலையைச் செலுத்திவிடுகிறோம்' என்று கடன் வேண்டினால் அதற்கும் இசைகின்றிலன்; இங்கேயிருந்து ஞானங்கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்களைத்தான் மோக்ஷத்திற்கனுப்புவேனென்கிறான். ஆகவே எம்பெருமானாகிற கடை மூன்று வகைப்பட்ட அஸௌகரியங்களும் நிரம்பியதென்பது தேறிற்று. எம்பெரு மானாராகிற கடையில் இவ்வகையான அஸௌகரியம் சிறிதுமில்லை. மோக்ஷமென்னும் சரக்குக்கு அவர் விலை விதிப்பதேயில்லையாதலால் அதிக விலையென்றாவது கறார்விலை யென்றாவது கைவிலையென்றாவது சொல்லக்கூடிய கஷ்டங்களுக்கு இங்கு ப்ரஸக்தியே

யில்லை. கேவலம் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையினாலேயே திருத்தி முமுக்ஷுத்வத்தை யுண்டாக்கி மோக்ஷ ஸாம்ராஜ்யமும் அளித்தருளுகிறார். ஆனபின்பு, முமுக்ஷுக்களே! நீங்கள் மோக்ஷார்த்தமாக எம்பெருமானைப் பணிந்து வருந்தாமல் எம்பெருமானாரைப் பணிந்து ஸுகப்படுங்கள்—என்று இப்பாட்டால் உபதேசித்தாராயிற்று.

12, 13. *செய்த்தலைச் சங்கம் செழுமுத்தமீனும்* என்கிற (75 ஆம்) பாட்டிலும், *நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும்* என்கிற (76 ஆம்) பாட்டிலும்—ஸ்வாமியிடத்தில் *தேவுமற்றறியாத பத்திப்பெருங்காதல் தமக்குள்ளமையை அற்புதமாக வெளியிடுகிறார் அமுதனார். எம்பெருமான் தனது விலக்ஷணமான அழகைக் காட்டிக் கொண்டுவந்து என் கண்ணெதிரே நின்றாலும் என்னைவிடாதே வலியப்பற்றினாலும் அவனுடைய அழகில் நான் மோஹிக்கப்பெறுவதில்லை, தேவரீருடைய திருக்குணங்களே அடியேனை யீடுபடுத்துகின்றன—என்றார் முந்தினபாட்டில். இப்படி அமுதனார் தம்முடைய பரம பக்தியை விண்ணப்பம் செய்யக்கேட்ட எம்பெருமானார் மிகவும் உகந்தருளி 'இவ்வளவு அன்புகொண்ட இவர்க்கு நாம் எதைச் செய்வோம்!' என்று தெகுடாடியிருக்க, அதைக் கண்ட அமுதனார், 'ஸ்வாமிந்! அடியேனுக்கு தேவரீர் வேறெதுவும் செய்தருளவேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய இந்தத் திருவடித்தாமரைகளைத் தந்தருள வேணுமென்கிறார் *நின்றவண்கீர்த்தியுமென்கிற அடுத்த பாட்டில். இப்பாட்டின் சீரிய பொருளைச் சிறிது விவரிப்போம்; திருமலையும் திருநாடும் திருப்பாற்கடலுமாகிய இத்தலங்களெல்லாம் ஸ்வாமிந்! தேவரீருக்கு எப்படிப்பட்ட ஆனந்தத்தை விளைக்குமோ அப்படிப்பட்ட ஆனந்தத்தை அடியேனுக்கு தேவரீருடைய திருவடிகள் விளைக்கும். *தெழிகுரலருவித் திருவேங்கடத்தெழில்கொள் சோதியெந்தைதந்தை தந்தைக்கு ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்* என்று நம்மாழ்வார் பாரித்தாப் போலத் திருமலையப்பனுக்குக் கைங்கரியம் பண்ணவேணுமென்று அடியேன் விரும்ப வில்லை; நம்மாழ்வாருகந்த விஷயமென்று தேவரீருகந்திருக்கலாம். *மாகவைகுந்தம் காண்பதற்கு என்மனமேகமெண்ணு மிராப்பகலின்றியே* என்று ஆழ்வார் விரும்பின திருநாட்டிலும் அடியேனுக்கு விருப்பமில்லை; அதையும் ஆழ்வாருகந்த திருநாடென்று தேவரீருகந்திருக்கலாம். *பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப் புணர்வதோராசை* என்று ஆண்டாள் விரும்பினாப்போலே திருப்பாற்கடல் நாதனோடு அணையவேணு மென்கிற விருப்பமும் அடியேனுக்கில்லை; அதனையும் நம் தங்கையுகந்த விஷயமென்று தேவரீருகந்திருக்கலாம்: உண்மையில் அடியேனுகந்த விஷயம் எதுவென்றால் '**எம்பெருமானார் திருவடிகளே சரணம்**' என்பதொன்றேயாம். ஆனபின்பு அடியேனுக்கு இத்திருவடிகளையே சேமவைப்பாகத் தந்தருளவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று. **

14. ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுருவின் யதிராஜ ஸப்ததியில் முதல் ஒன்பது ச்லோகங்கள் குருபரம்பராநுபவத்தில் சென்றன. 1. பெரிய பெருமாள், 2. பெரிய பிராட்டியார், 3. ஸேனை முதலியார், 4. நம்மாழ்வார், 5. ஸ்ரீமந்நாதமுனிகள், 6. உய்யக்கொண்டார், 7. மணக்கால்நம்பி, 8. ஆளவந்தார், 9. பெரியநம்பி—. ஆக, இப்படி குருபரம்பராநுபவம் செய்து தலைக்கட்டியபின் *ப்ரணமம் **லக்ஷ்மணமுநி;*** என்கிற ச்லோகம் முதலாக எம்பெருமானாருடைய குணாநுபவத்திலே இறங்கியுள்ளார்.

மேற்குறித்த ஆரம்ப ச்லோகத்தில் **லக்ஷ்மணமுநிம்** என்று ஸ்வாமியின் திருநாமத்தை வ்யபதேசித்தபடியினால், ஸ்வாமிக்கு அமைந்த **ராமாநுஜர்** என்னுந் திருநாமம், தசரதாத்மஜனான ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இளைய பெருமாளைக் குறிக்கொண்டதா மென்று விளக்கப்பட்டதாயிற்று. ராமாநுஜ னென்கிற திருநாமம், 'செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா!' என்னப்பட்ட நம்பிமூத்தபிரானென்னும் பலராமனுடைய தம்பியான கண்ணனையும் சொல்லக்கடவதென்பது முகுந்தமாலையில் ***ஹேராமாநுஜ ஹே ஜகத்த்ரய குரோ ஹேபுண்டரீகாக்ஷ*** என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகத்தினால் அனைவருமறிந்த தேயாம்; ஆகவே ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜரென்னுந் திருநாமம் கண்ணபிரானைக் குறிக்கொண்டதாகவும் கொள்வதற்கு இடமுள்ளது.

15. பலராமாநுஜனுக்கும் பகவத்ராமாநுஜனுக்கும் ஸாம்யம் நிர்வஹித்த சுலோகம் "**சமிதோதய சங்கராதி கர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:**" என்பதான பதின்மூன்ருவது சுலோகம். இந்த அற்புதமான ச்லோகத்தில் மூன்று வகைகளினால் கண்ணபிரானுக்கும் எம்பெருமானார்க்கும் ஸாம்யம், ச்லேஷாலங்கார மர்யாதையினால் அருளிச்செய்யப்பட்டுள்ளது. பல பொருள்படச் சொல்லுவது ச்லேஷம் [சிலேடை] எனப்படும். அது அபங்க ச்லேஷ மென்றும் ஸபங்க ச்லேஷமென்றும் இருவகைப்படும். பதங்களையொடித்துப் பொருள் கொள்ளவேண்டாமல் நாநார்த்தக பதங்களையிட்டுப் பல பொருள்களைப் பெறுவிப்பதானது அபங்க ச்லேஷமெனப்படும். அப்படியல்லாமல், பதங்களையொடித்துப் பல பொருள் கொள்ளுமாறு ப்ரயோகம் செய்வதானது ஸபங்க ச்லேஷமெனப்படும். இப்போது கொண்ட ***சமிதோதய*** என்னும் ச்லோக ரத்நத்தில் முதலிரண்டு பாதங்களில் அபங்க ச்லேஷம்; மூன்ருவது பாதத்தில் மட்டும் ஸபங்க ச்லேஷம். [**சமிதோதய சங்கராதி கர்வ:**] இது கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷணம். 'சங்கரன் முதலானோருடைய செருக்கை யடக்கினவர்' என்பது இதன் பொருள். கண்ணபிரான் பரமாகப் பொருள்கொள்ளும்போது சங்கரன் என்பதற்குச் சிவபிரானென்று அர்த்தம். ஆதிபதத்தினால் அப்பிரானைச்சேர்ந்த கார்த்திகையான் கரிமுகத்தான் முதலானோரை [ஸுப்ரஹ்மண்ய விநாயகாதிகளைக்] கொள்வது. கண்ணபிரான் பாணாஸுர யுத்தத்தில் சங்கரன் முதலானோருடைய செருக்கை யடக்கினது இதிஹாஸ புராண ப்ரஸித்தம். உடையவர் *சங்கர பாக்கர யாதவபாட்ட ப்ரபாகரர் தங்கள் மதஞ் சாய்வுற* என்றும் ***கா சங்கா சங்கராதே:*** என்றும் சொல்லுகிறபடியே, சங்கரகுரு ப்ரப்ருதிகளான புறமதத்தவர்களின் செருக்கைப் போக்கினவர் என்பது சரித்ர ப்ரஸித்தம். ஆகவே இந்த விசேஷணம் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யத்தை நிரூபித்ததாயிற்று.

16. [**ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:**] கண்ணபிரான் பரமான அர்த்தத்தில், யாதவர்களின் ப்ரகாசம் யயாதி சாபத்தினால் மங்கிக்கிடக்கையில், "**கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி**" என்கிறபடியே அந்த ப்ரகாசத்தைத் தனது வலிமையினால் புநருத்தாரம் செய்தவன் என்று கொள்ளக்கடவது. யதுகுலத்திலே பிறந்து யாதவர்களை விளக்கமுறச் செய்தருளினவன் கண்ணபிரான் என்க. உடையவர்பரமான அர்த்தத்தில், 'யாதவப்ரகாச' என்று முழுச்சொல்லாகக்கொண்டு, அப்பெயர்பூண்ட மாயாவாதி குருவைத் தம்முடைய க்ருபாபலத்தினால் உத்தரிப்பித்தவர் என்று கொள்க. முதலில்

தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்திக்கொள்ளும் படியான ப்ரபாவமுடையவர் எம்பெருமானர் என்க. இவ்வரலாறு உடையவர் சரிதையில் விரிவாகக் காணத்தக்கது.

17. [**அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந்**] 'அபார்த்தாந் ச்ருதே: அவரோபித வாந்' என்று அந்வயம். இதில் ஸபங்க ச்லேஷமுள்ளது. **அபார்த்தாந்** என்னும் பதம் (அ+பார்த்தாந்) என்றும் (அப+அர்த்தாந்) என்றும் பிரியும். பார்த்தனென்று அர்ஜுநனைச் சொல்லி, பார்த்தனல்லாத [அர்ஜுந விரோதிகளான] துர்யோதநாதிகளை அபார்த்தர்களென்று சொல்லுவதாகக் கண்ணன்பரமான அர்த்தத்தில் கொள்ளவேண்டும். **ச்ருதி**யென்று கீர்த்திக்கும் பெயர்; வேதத்திற்கும் பெயர். கண்ணபிரான் அபார்த்தர்களான துர்யோதநாதிகளைக் கீர்த்தியிலிருந்து கீழேயிறக்கிவிட்டான்; பாண்டவ பக்ஷபாதியாயிருந்து *மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியச்செய்து அவர்களைக் கீர்த்தியிழந்தவர்களாகச் செய்தானென்றபடி. ஸ்வாமி ராமாநுஜரோவென்னில்: [**ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்**] இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை ஸமீசீநார்த்த ப்ரதர்சநத்தினால் நிரஸித்தருளினவர். ஆனதுபற்றியே ***சமிதோதய சங்கராதி கர்வ**ராக முதல் பாதத்தில் கூறப்பட்டாரென்று உணர்க. (உதய) என்பதில் உதயநாசார்ய விவக்ஷையுமுண்டு.

18. மணவாளமாமுனிகள் யதிராஜவிம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் எம்பெருமானரை ஹம்ஸமாகவும் வண்டாகவும் அருளிச்செய்துள்ளார். ***ஸ்ரீரங்கராஜ சரணம்புஜராஜஹம்ஸம்*** என்றும் ***ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம்*** என்றும், (அதாவது) ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளிலே ராஜஹம்ஸமாயிருப்பவர்; நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளிலே சிறந்த வண்டாக இருப்பவர் என்று கூறிய வாறு. எம்பெருமானர் *தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளன்* [இராமாநுச நூற்றந்தாதி-31] என்கிறபடியே தேவப்பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயிருந்தும் ஸ்ரீரங்கநாதனால் விசேஷகடாக்ஷம் செய்தருளப்பெற்றுத் தென் திருவரங்கம் சென்று சேர்ந்து ***யாவச் சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ*** [இவ்வுடல் விழுந்தனையும் இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக் கடவீர்—சரணாகதிகத்யம்-19.] என்று திருவரங்கச் செல்வனாரால் அநுக்ரஹிக்கப்பட்டு அப்பெருமானுடைய திருவடிவாரத்தின் கீழேயே இனிது வாழ்ந்தபடியினால் **ஸ்ரீரங்கராஜ சரணம்புஜ ராஜஹம்ஸம்** என்றருளிச் செய்யலாயிற்று. இனி **ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம்** என்ற விசேஷணத்தினால்—ஸ்வாமி நம்மாழ்வாரது திருவடித்தாமரைகளிலே வண்டுபோல் படிந்திருப்பவரென்றது. ஆகவிப்படி ஸ்வாமியை ஹம்ஸமாகவும் வண்டாகவும் கூறினதிலிருந்து தேறுகின்ற ஸ்வாமியினது சில பெருமைகளை ஸ்வாபதேசார்த் தாநுபவப்ரணாளியாலே அநுபவிக்கிறோமிங்கு.

ஹம்ஸத்திற்குள்ள பல தன்மைகள் ஸ்வாமி பக்கலிலே குறையற்றிருக்கின்றன. எங்ஙனேயென்னில்; நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்க வல்லமையுடையது ஹம்ஸம் என்று பிரமாணங்களினாலறிகின்றோம்; ***ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்பு மிச்ரம்*** என்பது முதலான வசநங்கள் காண்க. இதனால் ஹம்ஸமானது

ஸாராஸாரவிவேகத்தில் மிகுந்த வல்லமையுடையது என்பது தேறும். ஸ்வாமி தாமும் *அஸாரமல்பஸாரஞ் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே* என்றபடி ஸாராஸாரஸங்குலமாயிருந்த சாஸ்திரங்களிலே அஸாரமாயும் அல்பஸாரமாயுமுள்ளவற்றை யெடுத்துத்தள்ளி மிகவும் ஸாரமானவற்றையே கைக்கொண்டவர். பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டி மதங்களையும் நிரஸித்து ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய உபயவேதாந்த ப்ரவர்த்தக ப்ரவீணரா யெழுந்தருளியிருந்து ரஹஸ்யார்த்தங்களில் பஹிரங்கமான அர்த்தங் களைத் தள்ளி அந்தரங்கமான அர்த்தங்களைக் கொண்டருளினர் என்பது இங்கு விவக்ஷிதம். அன்றியும், எம்பெருமான் வேதசாஸ்திரங்களை வெளியிடத் திருவுள்ளம்பற்றியபோது ஹம்ஸரூபத்தைப் பரிக்ரஹித்தருளினதாக சாஸ்த்ரங்களிலறிகிறோம்; *அன்னமாய் நூல் பயந்தான்* என்றும் *அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த* என்றும் ஆழ்வார்களு மருளிச் செய்கிறார்கள். சாஸ்த்ரோபதேசத்திற்கு ஹம்ஸமாயிருத்தல் அவசியமாயினபடி யாலே சாஸ்த்ரங்களை யுபதேசித்தவர்களில் தலைவரான எம்பெருமானாரை ஹம்ஸமென்றது பொருத்தமே. ஹம்ஸத்தினுடைய இயல்வைச் சொல்லுமவர்கள் *ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி* என்கிறார்கள்; அதாவது ஹம்ஸம் ஒருகாலும் சேற்று நீரில் கால் பொருந்ாதென்றபடி. அப்படியேயன்றோ எம்பெருமானார்படியும். "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை மாய வன்சேற்றள்ளல் பொய்நிலத்தே" என்று இந்த ஸம்ஸாரநிலமே சேற்றுநிலமாகச் சொல்லப்பட்டுள்ளது; இதில் கால் பொருந்தாத வர்களில் தலைவராயிற்று எம்பெருமானார். திவ்ய தேசங்களை வருணிக்கும்போது ஆழ்வார்கள் அன்னம் மாதர்களின் நடையைப் பின்சென்று நடப்பதாகக் கூறுகிறார்கள்; *பெடையோ டன்னம் பெய்வளையார்தம் பின்சென்று நடையோடியலி* என்று திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதிகமொன்றில் கூறியுள்ளது காண்க. ஸ்வாமிதாமும் அன்னநடையவணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்பவர். (அதாவது-) பிராட்டியின் நடையாவது நடத்தை; சேதநர்களைக் குறித்து எம்பெருமானிடத்தில் மன்றாடிப் பேறு பெறுவிப்பதே பிராட்டியினுடைய முக்கியமான நடத்தையாகும். அதை ஸ்வாமிதாமும் அநுஸரிக்கையாவது—தாமும் அப்படியே எம்பெருமானிடத்தில் மன்றாடி இன்றிருக்கும் நம்போல்வார்க்கும் பேறு பெறுவித்ததேயாம்.

19. இனி "ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம்" என்று வண்டாக அருளிச்செய்ததின் பொருத்தங்களை நிரூபிப்போம். வண்டு மதுவ்ரத மென்று பேர் பெற்றிருக்கும். தேன்தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, *உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்துளூறிய தேன்* என்றும் *தேனை நன்பாலைக் கன்னலையமுதை* என்றும் *எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே* என்றும் பலவிடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானையே விரும்பி மற்றொன்றைக் கண்ணெடுத்தும் பாராமல் பகவதநுபவத்தையே விரதமாகக் கொண்டிருந்தவர் எம்பெருமானார். *வண்டினங்கள் காமரங்களிசைபாடும்* என்றும், *யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும்* என்றும், *வரிவண்டுதேதென வென்றிசைபாடும்* என்றும் பணித்தபடியே வண்டுகள் யாழினிசைபோன்ற இசைகளைப் பாடுவதுபோல *பண்ணார்பாடல் *யாழினிசைவேதம்* என்னப்பட்ட திருவாய்மொழியின் கானத்தையே போதுபோக்காகவுடையராயிருந்தவர் ஸ்வாமி. "தமிழ்மறைகளாயிரமும் மொய்ம்பால்

வளர்த்த இதத்தாய் இராமானுசன்" "பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிட வெங்களிராமானுசமுனிவேழம்" என்றவை காண்க. வண்டு வடமொழியில் **சஞ்சரீக** மென்று பேர் பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியுமது. அதுபோல் ஸ்வாமிதாமும் ***ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத்த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா: புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:*** என்கிறபடியே *பதியே பரவித்தொழுந்தொண்டர்களில் தலைவராயிருந்தார். வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்லவேணுமென்று நினைத்தாலும் தட்டுத் தடங்கலின்றியே புகுந்து ரமிக்கும்; ஸன்னிதியில் கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெருமான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக் காணுநின்றோம். அதுபோல, *பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய* என்னும்படி திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்கவொண்ணாதபடி நெருக்க, *மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடுநாள்* என்னும்படியவதரித்தருளின எம்பெருமானார் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையுமின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்து வாழ்ந்தவர். வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானார் தாமும் *ஆராமஞ் சூழ்ந்தவரங்கம்* சிந்து பூ மகிழுந்திருவேங்கடம்* *விரையார்பொழில் வேங்கடம்* என்னும்படியாகச் சோலைகள் மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர். இப்படி மற்றும் பல பொருத்தங்களும் காண்க.

20. வண்டுக்கு **த்விரேப** மென்று பெயர்; இரண்டு ரேபங்களையுடையது என்றபடி. ரேபமாவது ரகரம். வண்டுக்கு வாசகமான (ப்ரமர) சப்தத்தில் இரண்டு ரேபமிருப்பதால் இது பற்றியே (வண்டு) த்விரேபமெனப்பட்டது. ஸ்ரீ ராமாநுஜராகிற வண்டானது தன்னிடத்தில் இரண்டு ரேபமில்லையேயென்கிற குறையைத் தீர்த்துக் கொள்வதற்காகவே **வரவர** முனிகளாக மற்றோரவதாரம் செய்தருளினபடி. ராமாநுஜத் திருநாமத்தில் ஒரு ரேபமேயாய், வரவர முனிதிருநாமத்தில் இரண்டு ரேபமிருக்கும்படி கண்டுகொள்வது. ... ...

ப்ரஸங்காத் அமுதனாருடைய பெருமையைப் பேசுவோம்.

உலகுக்கெல்லாம் ஒருயிராய் ஆரியர்கட்கெல்லாம் ஆரியரான எம்பெருமானார் விஷயத்தில் கவிபாடின புலவர்கள் பலர் இருந்தாலும், அவர்களுள் திருவரங்கத்தமுதனாரென்னுமாசிரியர்க்குண்டான ஏற்றம் ஒப்புயர்வற்றதாகும். மணவாளமாமுனிகளின் திருவடிகளைப் பணிந்து உய்ந்தவரான எறும்பியப்பாவின் பெருமையைச் சொல்லவந்த ஒரு ச்லோகம் உலகில் ப்ரஸித்தமானது; அதாவது—"**சடரிபுரேக ஏவ கமலாபதிதிவ்ய கவி: மதுரகவிர் யதா ச சடஜிந்முநிமுக்க்யகவி:**, **யதிகுலபுங்கவஸ்ய புவி ரங்கஸுதா**

கவிராட் வரவரயோகினோ வரதராஜகவிச் ச ததா.'' என்பதாம். இதன் பொருள் யாதெனில், திருமகள் கொழுநனை ஸர்வேச்வரனைக் கவிபாடித் துதித்தவர்களுள் நம்மாழ்வார் எப்படி சிறப்புப் பெற்றவரோ, அந்த நம்மாழ்வாரைக் கவிபாடித் துதித்தவர்களுள் ஸ்ரீ மதுரகவிகள் எப்படி சிறப்புப் பெற்றவரோ, எம்பெருமானாரைக் கவிபாடித் துதித்தவர்களுள் திருவரங்கத்தமுதனார் எப்படி சிறப்புப்பெற்றவரோ, அப்படியே மணவாளமாமுனிகளைக் கவிபாடித் துதித்தவர்களுள் எறும்பியப்பா சிறப்புப் பெற்றவர்—என்பதாம். உண்மையில், எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் புகழ்ந்து பேசப்பிறந்த நூல்களுள் திருவரங்கத்தமுதனார் திருவாய்மலர்ந்தருளிய இராமானுச நூற்றந்தாதிக்கு இணையானது எதுவுமில்லையென்று சபதமிட்டுரைப்பர் பெரியோர். சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்குமாகிய எந்நோக்கும் மிக அற்புதமாக வன்றோ நூற்றந்தாதியில் அமைந்துள்ளது.

அமுதனாருடைய வரலாற்றைப்பற்றிச் சிறிது பேசுவோம். இவர் பங்குனித் திங்களில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் மூங்கிற்குடியென்னும் சிறந்த திருவம்சத்தில் தோன்றித் திருவரங்கம் பெரியகோயிலில் இருந்துவந்தார். **பெரியகோயில்நம்பி** யென்று முதலில் இவர்க்கு ப்ரஸித்தி இருந்துவந்தது. அஷ்டப்பிரபந்தம் செய்தருளினவரும் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவருமான பிள்ளைப்பெருமாளையங்கார்க்கு இவர் திருத்தகப்பனாரென்று சிலரும் பாட்டனாரென்று சிலரும் சொல்லுவர். அமுதனார் கூரத்தாழ்வானையடி பணிந்து உஜ்ஜீவித்துவரும் நாளில், ஆழ்வானுடைய திருவுள்ளவுகப்புக்காக ப்ராசார்யரான எம்பெருமானார் விஷயமாகச் சில பிரபந்தங்கள் இயற்றவேணுமென்னும் அவா இவர்க்கு உண்டாக, ஒன்றிரண்டு பிரபந்தங்களைச்செய்து அவற்றை எம்பெருமானார் ஸன்னிதியிலே கொண்டுவைத்தார். எம்பெருமானாரும் அவற்றை அவிழ்த்துக் கடாக்ஷிக்க, அவை தம் திருவுள்ளத்திற்கு இசைந்திராமையாலே உபேக்ஷித்திருந்தார். அப்படி ஸ்வாமி திருவுள்ளத்தில் வெறுப்பு உண்டானதற்கு யாது காரணமென்று இவர் விமர்சிக்கையில், தாம் இயற்றிய பிரபந்தம் ஸ்வாமி திருவுள்ளத்திற்குப் பாங்காக அமைந்திலது என்று தெரிந்துகொண்டார். ஸ்வாமி கற்ற கல்விகளின் விரிவையும் அவர் பாஹ்யகுத்ருஷ்டி மதங்களைக் களைந்தொழித்து வெற்றிபெற்ற வரலாறுகளையும் பரக்கப் பேசியிருந்தாராம் அப்பிரபந்தத்தில். ஆழ்வார்கள் பக்கலிலும் அவர்களது ஈரச் சொற்களிலும் ஸ்வாமிக்கு இருந்த ஈடுபாடு மிகவும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருந்ததாம். இத்தகைய துதிவகையில் ஸ்வாமி திருவுள்ளம் சிறிதும் உகப்புக் கொள்ளவில்லையென்று தெரிந்த பின்னர், அவர்தம் திருவுள்ளத்திற்குப் பாங்காக வேறொரு பிரபந்தத்தைப் பணித்துத் திருவடி வாரத்தில் கொணர்ந்து ஸமர்ப்பித்தார். இப்போது அநுஸந்தானத்திலுள்ள **இராமாநுசநூற்றந்தாதியே** அது.

ஸ்வாமி அதனைக் கடாக்ஷித்தருளிப் புன்முறுவல் கொண்டிருந்தார். அப்போது ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலான அந்தரங்கசிஷ்யர்கள் யாவரும் அப்பிரபந்தத்தை உற்று நோக்கி, அதில் ஸ்வாமியின் திருவுள்ளவுகப்பையும் விசேஷித்தறிந்து மிக்க குதூஹலங்கொண்டு. ''இப்பிரபந்தம் ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களோடொக்கப் பரிக்ராஹ்யமாம்படி நியமித்தருளவேணும்'' என்று திருவடிகளைப் பிடித்துக்கொண்டு

பிரார்த்திக்க, ஸ்வாமி அதற்கு ஸஹஸா இசைந்தருளவில்லை. குசலவர்கள் பாடினதை ஸ்ரீராமபிரான் கேட்டருளி மிகவுமுகந்து "மமாபி தத் பூதிகரம்" என்று கொண்டாடின வரலாற்றை எடுத்துரைத்து அனைவரும் நிர்ப்பந்திக்க, இத்தனை பேருடைய குதூஹலத்திற்கு நாம் பங்கம் விளைக்கலாகாதென்று ஸ்வாமி திருவுள்ளம்பற்றி, அழகியமணவாளனுடைய நியமனத்தையும் பெற்று அப்படியே நியமித்தருளினார். ஸ்வாமி எழுந்தருளியிருந்த காலத்திலேயே இப்பிரபந்தம் ஸந்நிதிகளிலும் திருமாளிகைகளிலும் ஸேவிக்க உபக்ரமமாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பிறகு அநத்யயநக்ரமம் திவ்யப்பிரபந்தங்களுக்குப் போலவே இந்த நூற்றந்தாதிக்கும் அன்றுதொட்டு எங்கும் நிகழ்ந்து வரக்காண்கையாலே இதற்கு திவ்யப்ரபந்தத்தோடு ஸர்வாத்மநா ஸாம்யம் பூர்வாசார்ய ஸம்மதமாயிற்றென்பது அறியத்தக்கது.

உபதேச ரத்தினமாலையில் கண்ணிநுண்சிறுத்தாம்பை ப்ரஸ்தாவித்து *வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல், சீர்த்தமதுரகவி செய்கலையை—ஆர்த்தபுகழ் ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே, சேர்வித்தார் தாற்பரியந் தேர்ந்து* என்றருளிச் செய்த மணவாளமாமுனிகள் இராமானுச நுற்றந்தாதியைப்பற்றி ஒன்றுமருளிச் செய்யாததேன்? திருவரங்கத்தமுதனார்க்கு நாள் பாட்டும் பணிக்கவில்லையே, ஏன்? என்று சிலர் கேட்பதுண்டு. ஸந்நிதிகளில் விக்ரஹப்ரதிஷ்டை பெற்றிருந்தவர்களுக்கே நாள் பாட்டு அருளிச்செய்யலாயிற்றென்பது ஸாரமான ஸமாதானம்.

நூற்றந்தாதிக்கும் அமுதனார்க்குமாகவே உபதேச ரத்தினமாலையில் *இன்றுலகீர் சித்திரையிலேய்ந்த திருவாதிரை நாள்* என்று தொடங்கி மூன்று பாசுரங்கள் அருளிச் செய்தது. திருக்குருகைப்பிரான்பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர் முதலான ஆசார்யர்களைப் பற்றியும் உபதேச ரத்தினமாலையில் ப்ரசம்ஸையிருந்தாலும் அவர்கள் அவதரித்தமாதமோ நக்ஷத்ரமோ அதில் பேசப்படவில்லை. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் பணித்தவர்களுக்குமாத்திரமே *மாதங்கள் நாள்கள்தமை மண்ணுலகோர்தாமறிய ஈதென்று சொல்லியுள்ளார். அந்த வரிசையில் "சித்திரையில் செய்ய திருவாதிரை" என்று நாள் பாட்டு அமைத்திருப்பதை ஆழ்ந்து நோக்கவேணும். திவ்யப்பிரபந்தமருளிச்செய்யாத எம்பெருமானார்க்கு மதுரகவி கட்கடுத்தபடியாக நாள் பாட்டு அமைத்தது இராமானுச நூற்றந்தாதிக்காகவேயென்பது சொல்லவும் வேண்டுமா? எம்பெருமானார்க்கேயிறே விக்ரஹப்ரதிஷ்டையுள்ளது.

நாலாயிரத்திற்கும் வியாக்கியானஞ் செய்தருளின பெரியவாச்சான் பிள்ளை நூற்றந்தாதிக்கு ஏன் வியாக்யானஞ் செய்தருளவில்லையென்று சிலர் விமர்சிப்பதுண்டு. ஸ்தோத்ரரத்நத்திற்கு வியாக்யானஞ் செய்தருளினவர் பஞ்சஸ்தவாதிகளுக்கு வியாக்கியானஞ் செய்தருளவில்லையென்பதனால் ஒரு குறையில்லையே, அதுபோலவே யிங்குமென்று ஸமாஹிதராகலாம். அமுதனாருடைய திருவம்சத்திலொருவர் நுற்றந்தாதிக்கு வியாக்கியானமிட்டிருந்தாரென்றும், அது லோபித்ததனால் மணவாளமாமுனிகள் வியாக்கியானித்தருளினரென்றும் கேட்டிருந்ததுண்டு.

நூற்றந்தாதியின் திருவவதாரத்தைப்பற்றி மற்றொருவிதமான ஐதிஹ்யமும் பெரியார் பக்கலில் கேட்டிருந்ததுண்டு; எங்ஙனே யெனின்; அமுதனார் இப்பிரபந்தம் இட்டருள்வதாக அடையவளைந்தான் திருமதிலுக்கு இவ்வருகேயிருந்த ஒரு தென்னஞ்

சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும்போது எம்பெருமானார்தாம் கூரத்தாழ்வான் முதலான சில அந்தரங்க சிஷ்யர்களோடு அவ்விடத்தே யெழுந்தருளினாராம்; அப்போது *செழுந்திரைப்பாற்கடல் என்கிற நூற்றைந்தாம் பாசுரம் தலைக்கட்டி *இருப்பிடம் வைகுந்த மென்கிற பாசுரம் எழுத வேண்டிய தருணமாயிருந்ததாம்; அது முதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே தொடுக்கப்பட்டனவாம். பிறகு அரங்கேற்றியானபின் "இந்த விசேஷத்திற்கு ஸ்மாரகமாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப்பாசுரங்கள் மூன்றாயிருக்கட்டும்" என்று ஆழ்வான் நியமித்தருளினாராம். ஆனதுபற்றியே மற்றைப் பிரபந்தங்களுக்கு இரண்டு பாசுரம் சாத்துப்பாசுர மாயிருப்பது போலல்லாமல் இப்பிரபந்தத்திற்கு மூன்று பாசுரம் சாத்துப்பாசுரமாக ஸம்ப்ரதாயம் நிகழ்கின்றது—என்று. இவ்வைதிஹ்யம் *இருப்பிடம் வைகுந்த மென்கிற பாட்டின் ப்ரமேயத்திற்கு மிகவும் பொருந்தியிருக்கும்.

இந்த நூற்றந்தாதிபோல் மற்றும் பல பிரபந்தங்களும் ஸ்வாமி விஷயமாகத் திருவவதரித்திருந்தனவென்பது இதுதன்னில் ஆறாவது பாசுரத்தினால் அறியலாகிறது; "இயலும் பொருளுமிசையத் தொடுத்து ஈன்கவிகளன்பால் மயல்கொண்டு வாழ்த்து மிராமானுசனை" என்றது காண்க. அப்படிப்பட்ட பிரபந்தங்களெல்லாம் பகல்விளக்கும் மின்மினியுமாகி இப்பிரபந்தமொன்றே சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் இதிலுள்ள சப்தகாம்பீர்யமும் அர்த்த புஷ்டியுமாகும்.

ஸ்வாமி காலத்திலே ஸ்வாமி நியமனங்கொண்டே கருட வாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரிதத்தில் பதினெட்டாம் ஸர்க்கத்தில் (51.)

"ஸ்ரீரங்காம்ருதகவிராஹ ரங்கிப்ருத்ய: தச்சிஷ்யோ யதிபதிவைபவாநுபந்தம்,
அந்தாதித்ரமிடகிரா மஹாப்ரபந்தம் காதாநாம் அம்ருதமுசாம் யுதம் சதேந."

என்னும் ச்லோகத்தில் இப்பிரபந்தத்தின் பெருமை பேசப்பட்டுள்ளது. இதன் பொருளாவது, திருவரங்கத்தமுதனார் அமுதப்பெருக்கான தமிழ் மொழிபாலே எம்பெருமானாருடைய வைபவங்களைப் பேசுகிற நூற்றந்தாதி ப்ரபந்தத்தை யருளிச் செய்தாரென்பதாம்.

இந்நூற்றந்தாதியில், ஸ்வாமிக்கு ஆழ்வார்கள் பக்கலிலும் ஆசாரியர்கள் பக்கலிலுமிருந்த ப்ராவண்யாதிசயம் மிக அற்புதமாகப் பேசப்பட்டிருக்கின்றது. பாசுரம் தொடங்கும்போதே *மாறனடி பணிந்துய்ந்தவன்* என்றும், உடனே *குறையல் பிரானடிக் கீழ் விள்ளாதவன்பனி ராமானுசன்* என்றும் அருளிச் செய்தது ஸ்வாமியின் உண்மையான வைபவத்தை விளக்குகின்றது. பொய்கையார் பூதத்தார் முதலான ஒவ்வோராழ்வார் திறத்திலும் ஸ்வாமிக்கிருந்த பக்தியின் கனம் பல பாசுரங்களினால் பேசப்பட்டிருக்கின்றது. விசேஷித்து, நம்மாழ்வார் பாசுரங்களையும் திருமங்கையாழ்வார் பாசுரங்களையுங்கொண்டே ஸ்வாமி வாழ்ந்தருளினாரென்பது இப்பிரபந்தத்தில் அடிக்கடி சாட்டப்படுகிறது. (19.) *உறுபெருஞ் செல்வமும்* (29.) *கூட்டும் விதியென்று கூடுங்கொலோ* (46.) *கூறுஞ்சமயங்களாறுங்குலைய* (54.) *நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன* (64.) *பண்டருமாறன் பசுந்தமிழ்* (88.) *கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல்* என்கிற பாசுரங்கள் விசேஷித்து நோக்கத் தக்கன. ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார் முதலான பரமாசார்யர்கள் திறத்தில் ஸ்வாமிக்கிருந்த பத்திப் பெருங்காதல் 20, 21 முதலான சில பாசுரங்களில் பேசப்பட்டது. கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்ய தேசங்களிலுண்டான ஆதராதிசயம் 31, 35, 42, 47, 49, 76, 81, 91, 106 முதலான பாசுரங்களில் பேசப்பட்டுள்ளது. ... ✽

ப்ராப்தமாகவில்லை. அதுமுதல் ஸ்வாமி அடிக்கடி கனவில் காட்சி தந்து எனக்கு ஸாளக்ராம யாத்திரையை நடத்திவைக்க வேணுமென்கிற அபேக்ஷையைக் காட்டி வருவதால் இதை பகவானுடைய நியமனமாகக்கொண்டு அடியேன் விஜ்ஞாபனங்களெழுதிக்கொண்டேன். வெகுநாளாய் ஸ்ரீமுகம் வருவதே நின்றுவிட்டபடியால் அழைத்துக்கொண்டு போகவேணுமென்கிற உறுதியுடன் வந்திருக்கின்றேன்" என்றார்.

இது ஸ்ரீ ஸாளக்ராம பகவானுடைய பரமாநுக்ரஹ பரீவாஹமேயென்றுகொண்ட அடியேன் இதற்கு எவ்விதமான தடையும் சொல்லலாகாதென்றும், இந்த ஸமயம் அவசியம் சென்று ஸேவித்தே வரவேணுமென்றும் உறுதிகொண்டேன். அப்போது உபந்யாஸ ஸபையாரும் ஒருவர் தப்பாமல் 'இந்த ஸமயத்தை இழக்கவே கூடாது; இரண்டு மூன்று மாதங்களானாலும் அவசியம் இந்த யாத்திரையை நடத்தி முடிப்பதே நலம்; எம்பெருமானே நேரில் வந்து அழைப்பது போலன்றோவுள்ளது' என்று கூறினார்கள். சிலர் தாங்களும் உடன் வருவதாகச் சொன்னார்கள். நாலைந்து நாள்களுக்குள்ளாகவே பிரயாணப்படுவதென்று உறுதி செய்து 'இரண்டு மாதங்கள் வரையில் உபந்யாஸத்திற்கு விராமம்' என்று சொல்லியுமாயிற்று. உடனே காஞ்சீபுரம் வந்து சேர்ந்தவளவிலே, அஸ்மதாசார்யரான ஸ்ரீ காதிஸ்வாமி அப்போது திருமேனியில் அபரிமிதமான அசக்தியுடன் (Chapra) சப்ரா என்னுமூரிலே [காசீ ப்ராந்தத்திலே] எழுந்தருளியிருக்கிறபடியாதலால் அங்கிருந்து தந்தி ஸமாசாரம் கிடைக்க, ஸ்ரீ ஸ்வாமி திருக்குமாரரையழைத்துக்கொண்டு அங்கே செல்லவேண்டியதாயிற்று. அன்றைக்கே புறப்படலாயிற்று. நேபாள மஹந்து சென்னையிலிருந்து திருமழிசை முதலான சில திவ்யதேசங்களை ஸேவித்துக்கொண்டு இரண்டு மூன்று நாளில் காஞ்சிவந்து சேருவதாகச் சொல்லிப் பிரிந்து போனவராதலால் அவரைச் சந்திக்க முடியாமலே நான் சப்ரா சென்றுவிட்டேன். அந்த மஹந்து 3, 4 நாளிள் காஞ்சீபுரம் வந்து சேர்ந்திருந்தார்.

அடியேன் சென்றவிடத்துச் செய்தியைச் சுருக்கமாக விஜ்ஞாபிக்கிறேன். சப்ரா சென்று சேர்ந்து ஸ்ரீ ஸ்வாமியின் திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவிக்கவும் வார்த்தையாடவும் ப்ராப்தமாயிற்று. "இங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சிக்கெழுந்தருள வேணும்" என்று பிரார்த்திக்கையில் 'அப்படித்தான் உத்தேசம்; இரண்டு நாளில் புறப்படுவோம்' என்று ஸாதித்து, காலை பத்துமணியிலிருந்து மாலை ஐந்துமணி வரையில் அநேக யோக க்ஷேம விசாரங்கள் செய்துகொண்டு வார்த்தையாடிக்கொண்டே யிருக்கையில் 'எல்லாரும் சற்று எழுந்து அப்பால் போயிருங்கள்' என்று நியமித்துவிட்டு ஸந்த்யாவந்தனம் செய்தருளிப் படுக்கையை விரிக்கச் சொல்லி சயனித்துக்கொண்டு தியானத்தில் அமர்ந்துவிட்டார். ஆறுமணிக்குமேல் எல்லாரும் வந்து அருகேயிருந்து 'திருமேனியின் நிலை என்ன?' என்று கேட்கையில் 'ஒன்றுமில்லை' என்று ஸாதித்ததுதான் கடைசியான திருவாக்கு. பிறகு இரண்டு நாழிகைக்குள் திருநாடலங்கரித்தாயிற்று. இந்தச் செய்தி அன்றிரவே காஞ்சிக்குத் தெரியவந்தபடியால் இதைச் செவியுற்ற நேபாள மஹந்து இந்த ஸந்தர்ப்பத்தில் ஸாளக்ராம யாத்திரை நடைபெருதென்று தானே முடிவு செய்துகொண்டு ஸ்வஸ்தானம் சென்று சேர்ந்துவிட்டார். ஸாளக்ராம யாத்திரையில் எம்பெருமானுடைய திருவுள்ளம் இவ்வளவே போலுமென்று நிராசனுயொழிந்தேனடியேன். ...

நினைவுக்குவருவன நவிலக்கேளீர்

(4)

அடியேனுக்கு ஸ்ரீபதரிகாச்ரம பர்யந்தமான வடநாட்டு யாத்திரை பலமுறை கிடைத்திருக்கிறதென்று பலகால் விஜ்ஞாபித்திருக்கின்றேன். ஸாளக்ராம க்ஷேத்ர யாத்திரை ஒரு பர்யாயங்கூட நேர்ந்ததில்லை. ஆனால் சென்று ஸேவிக்க வேணுமென்கிற குதூஹலம் மிகமிக வுண்டு. ஸாளக்ராமம் போகிறவழியில் **காட்மண்டு** என்பதொரு ஸ்தலமுள்ளது. அவ்விடத்திலே வஸிப்பவரான ஒரு மஹந்து எனக்கு அபரிசிதராயிருந்தும் தாமாகவே எனக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தார். ஸாளக்ராமம் வந்து ஸேவிக்க வேண்டுமென்று ஒவ்வொரு கடிதத்திலும் எழுதிக்கொண்டிருந்தார். காட்மண்டுவரையில் எளிதாக வந்து விடலாமென்றும், அவ்விடம் வந்து விட்டால் அங்கிருந்து தாம் ஸாளக்ராம யாத்திரையை ஸௌக்கியமாக நடத்திவைக்க முடியுமென்றும் மாதந்தோறும் சோம்பாது எழுதிக்கொண்டிருந்தார். இது முப்பது வருடங்களுக்கு முற்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறபடி. அந்த ஸமயத்தில் பல மாதங்கள் அவர்க்கு நான் பதில் எழுதாமலேயிருந்து விட்டேன். அதனால் அவர் மிகவும் பரிதபித்து முன்னடி தெரிவிப்பதும் செய்யாமலே நேராகக் காஞ்சீபுரம் வந்தார். அன்று நான் சென்னையில் உபந்யாஸத்திற்காக வந்திருந்தபடியால் அதைத் தெரிந்துகொண்டு உடனே இவர் காஞ்சியில் நின்றும் புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்து உபந்யாஸ ஸபைக்கும் வந்து சேர்ந்து ஒருபுறமாக உட்கார்ந்து கொண்டார். இவரை நான் முன்பு பார்த்ததில்லை யாதலால் இவரை இன்னாரென்று தெரிந்துகொள்ளாமலிருந்தேன். ஸ்ரீபெரும்பூதூர், திருமழிசை முதலானவிடங்களிலுள்ளாரில் இவரொருவர் என்றும் நினைத்துவிட்டேன். உபந்யாஸ முடிவில் இவர் எழுந்து அருகே வந்து ஸ்ரீஸாளக்ராமத் திருமூர்த்திகள் நிரம்பியிருந்தவொரு சிறு பெட்டியைக் கையிலே கொடுத்து நமஸ்கரித்து நின்றார். நீர் யார்? எவ்விடம்? என்று ஹிந்தியில் விசாரிக்கையில், அவருக்கு நான் எழுதியிருந்த கடிதங்களை ஒன்றுவிடாமல் அவர் என் கையில் கொடுத்து ஒன்றும் பேசாமலே நின்றார். உடனே அவரை நான் இன்னாரென்று தெரிந்துகொண்டு 'திடீரென்று இவ்விடம் வந்த காரணமென்ன?' என்று வினவினேன். அவர் கண்ணீர் பெருகநின்று "பல மாதங்களாய் ஸ்வாமி அடியேனை உபேக்ஷித்திருக்கும் காரணம் தெரியவில்லை; நேரில் பிரார்த்தித்து ஸாளக்ராம க்ஷேத்ரத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போவதற்காகவே வந்தேன். இது நல்ல ஸமயம், ஒரு வாரத்திற்குள் அவசியம் புறப்பட்டு எழுந்தருளவே வேணும். இந்த யாத்திரைக்காக ஆகும் செலவுகளெல்லாம் என்னுடையவை; ஒன்றும் ஆலோசியாமல் புறப்படவேணும். இந்த ஸபையிலேயே வாக்தானம் செய்யவேணும்" என்றார். அப்போது உபந்யாஸ கோஷ்டி கலையவில்லை. யாவரும் உட்கார்ந்துகொண்டேயிருக்கிறார்கள். இவ்வளவையும் செவியுற்று அதிசயப்படுகிறார்கள். பிறகு நான் அவரைக் கேட்கின்றேன்—எனக்கு ப்ராப்தமாகவேண்டிய ஸ்ரீஸாளக்ராம யாத்திரையைப்பற்றி உமக்கு ஏதுக்காக இவ்வளவு விசாரம்?" என்றேன். அதற்கு அவர் சொன்னது—"சில வருஷங்களுக்குமுன் ஸ்வாமியை அடியேன் ஸ்ரீஜகந்நாதபுரியில் நன்கு ஸேவித்திருக்கிறேன். ஆனால் நெருங்கிப் பழக

எழுபத்தேழு பெரியார்களின் பெருமை

முன்தொடர்ச்சி—(4.)

22. ஸ்ரீமதுபயவே. (திருவிண்ணகர்) நவநீதம். ஸ்ரீக்ருஷ்ணமாசார்யஸ்வாமி

திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள திருவிண்ணகரென்கிற ஒப்பிலியப்பன் ஸன்னிதியில் நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியென்று ப்ரஸித்தரான மஹான் எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி 25 ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு திருநாட்டுக்கெழுந்தருளினவர். இந்த ஸ்வாமியினுடைய க்ருபைக்கு அடியேன் மிக்க இளமையிலேயே இலக்காகப் பெற்றவன். மஹா ஜ்ஞாநாதிகராயும் சிஷ்டவரிஷ்டராயுமெழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமியை ஸேவிப்பதற்கென்றே அடியேன் சிலஸமயம் திருவிண்ணகர்க்கு விடைகொண்டிருக்கிறேன். ஸ்வாமியும் பன்முறை காஞ்சிக்கெழுந்தருளிப் பரமாநுக்ரஹம் செய்தருளியிருக்கிறார். ஸ்வாமி அனேக க்ரந்தங்களை முத்ரணம் செய்வித்தருளியிருக்கிறார். மஹாபாரதம், ச்ருதப்ரகாசிகைக்கு வியாக்கியானமான பாவப்ரகாசிகை, ஸவ்யாக்க்யானமான மீமாம்ஸாபாதுகை முதலான க்ரந்த ரத்னங்களை க்ரந்தலிபியிலும், நயமயூகமாலிகை, சாரீரக சாஸ்த்ரார்த்த தீபிகை முதலான க்ரந்தங்களை தேவநாகராக்ஷரத்திலும் பதிப்பித்த மஹோபகாரகர். ஸ்வாமியின் திருக்குமாரர்களிருவர் சிறந்த வித்யா நிதிகளாக விளங்கி வருகிறார்களென்பது விசேஷித்துக் குறிப்பிடத்தக்கது. மூத்த புதல்வரான ஸ்ரீஉவே. வ. ந. ஸ்ரீராமதேசிகாசாரியர் வடமொழி தென்மொழிக் கடலில் பரிபூர்ண பாரங்கதர். இளைய புதல்வரான ஸ்ரீமான் சேஷாத்ரி வடமொழியிலும் ஆங்கிலத்திலும் மிக்க தேர்ச்சிபெற்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் உயர்ந்த ஆசிரியராக விளங்கி வருகிறார். இவ்விரு புதல்வர்களும் ஸகலவிதத்திலும் திருத்தந்தையாரை அதிசயித்தவர்களென்றால் மிகையாகாது. இவ்விரு திருக்குமாரர்களும் மஹா மேதாவிகள். ... ❁

23. ஸ்ரீமதுபயவே. கச்சிக்கிடாம்பி. பாஷ்யகாராசார்யஸ்வாமி.

திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீஉவே. கச்சிக்கிடாம்பி. பாஷ்யகாராசார்ய ஸ்வாமி இருபது வருஷங்களுக்கு முன்னம் திருநாட்டுக்கெழுந்தருளினவராகையாலே அந்த ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவமண்டலம் நன்கறியும். இந்த ஸ்வாமி ந்யாய சாஸ்த்ரத்திலும் உபய வேதாந்தங்களிலும் நிஷ்ணுதர். ஸ்வாமியினுடைய பரிசயம் அடியேனுக்கு நாற்பது ஸம்வத்ஸரங்களுக்கு மேலுண்டு. ஆனால் மிக நெருங்கிப் பழகி வார்த்தையாட அதிகமாக நேர்ந்ததில்லை. ஆங்காங்கு திவ்ய தேசங்களில் உத்ஸவ காலங்களில் ஸேவை ஸாதிப்பர். வித்வத்வரேண்யரான ஸ்ரீரங்கம் எம்பார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் ப்ரசம்ஸையை இந்த ஸ்வாமி சில ஸமயங்களில் செய்தருளக் கேட்டிருக்கிறேனுதலால் இவர்க்கு அந்த ஸ்வாமி ஸன்னிதியில் சாஸ்த்ராத்யயனங்கள் நடந்ததாக அடியேன் க்ரஹித்திருப்பதுண்டு. அடியேனுடைய வேதாசார்யரான மாம்பள்ளம் ஸ்வாமி இந்த ஸ்வாமியினுடைய வித்யாபரிச்ரமங்களைப்பற்றி அடிக்கடி ஸாதிப்பதோடு இந்த ஸ்வாமி ஆழ்ந்த ஞானமுடையவரென்றும் பல ஸந்தர்ப்பங்களில் ஸாதிக்கக் கேட்டிருக்கிறேனுதலால் இந்த ஸ்வாமியை விசிஷ்ட வித்வானென்று போற்று

வனடியேன். இவருடைய திருக்குமாரரும் வித்வானும் திருமலையில் ஆகமோபாத்யாயராக விளங்கிவருகிறார். சிறந்த அதிகாரி. ... ... ❋

24. 25. ஸ்ரீமதுபயவே. திருநாங்கூர். ப்ரதிவாதிபயங்கரம் க்ருஷ்ணமாசாரியர்ஸ்வாமிகளிருவர்.

திருநாங்கூரில் பல மஹான்கள் எழுந்தருளியிருந்தார்கள். அங்கு வைகுந்த விண்ணகரம் ஸன்னிதி வீதியில் ப்ரதிவாதிபயங்கரம் பெரிய கிருஷ்ணமாசார்யஸ்வாமியும் சின்ன க்ருஷ்ணமாசார்யஸ்வாமியும் ப்ரஸித்தர்களாயிருந்த மஹநீயர்கள். "ஏகயோக்த்யா புஷ்பவந்தௌ திவாகரநிசாகரௌ" என்ற கணக்கிலே இவ்விரு மஹான்களையும் ஒரு சேர அநுபவிக்கிறேன். பெரிய க்ருஷ்ணமாசார்யஸ்வாமி அபார வித்யா நிதியாக எழுந்தருளியிருந்தவர். சாஸ்த்ரஜ்ஞர்களில் தலைவராயிருந்ததோடு மஹாகவீச்வரராய் அனேக காவியங்கள் ஸ்தோத்ரங்கள் அருளிச்செய்திருந்தார். இந்த ஸ்வாமி அடியேனுடைய இளமையில் பல வருஷங்கள் ஸ்ரீ காஞ்சியிலெழுந்தருளியிருந்தபடியால் இந்த ஸ்வாமியிடத்திலும் சில நாடகங்கள் வாசிக்க நேர்ந்ததடியேனுக்கு. இந்த ஸ்வாமி திருநாங்கூரில் குலகூடஸ்தர் ஸன்னிதியைத் திரு ப்ரதிஷ்டை செய்திருந்தார். 40 வருஷங்களுக்கு முன்பு சரமஸமயத்தில் உத்தமாச்ரமியாகித் திருநாட்டுக்கெழுந்தருளினார். இந்த ஸ்வாமிக்கு வித்வத்பஹுமானமாக (தோடா) என்கிற கரபூஷணம் கிடைத்திருந்தபடியால் "தோடா. கிருஷ்ணமாசார்யஸ்வாமி" என்று வ்யபதேசமிருந்துவந்தது. இவர்க்கு ஸந்ததியில்லாமையினால் இவர் ஏறியருளப்பண்ணின கூடஸ்த ஸன்னிதியும் பரிபாலனமில்லாமே போயிற்று. அது மிகவும் சோசநீயம்.

இந்த ஸ்வாமியின் திருநாமமேகொண்டு இவருடைய ஸங்நிஹிதஜ்ஞாதியும் இவருடைய அடுத்த திருமாளிகைக்காரருமானவர் "சின்ன கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி" யென்றே வழங்கப்பட்டுவந்தார். இவர் ஸ்ரீமத் திருக்கண்ணபுரம் பட்டப்பாஸ்வாமி ஸன்னிதியிலும் மற்றும் பெரியார்களிடத்திலும் ந்யாய வேதாந்தங்களும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதிகளும் அதிகரித்து மிகச் சிறந்த ப்ரவக்தாவாக விளங்கினார். சிலபல ஸம்வத்ஸரங்கள் சென்னைமாநகரில் சாரிடிகளில் ப்ரவசனநிரதராய் ப்ரக்க்யாதராயிருந்தார். இந்த ஸ்வாமியின் இரு திருக்குமாரர்களும் வித்வான்களாக விளங்கிவருகிறார்கள். அண்ணங்கராசாரியரென்று திருநாமமுடைய ஜ்யேஷ்டகுமாரர் குஜராத் ப்ராந்தத்தில் **வடதால்** என்னுமிடத்தில் சாஸ்த்ரப்ரவக்தாவாக இருந்துகொண்டு ஸ்வாமிநாராயண ஸம்ப்ரதாயஸ்தர்களான பலரை வித்வான்களாக்கிவருகின்றார். சிறிய திருக்குமாரர் ஸ்ரீநிவாஸாசாரியரென்பவர் தற்போது திருநெல்வேலியிலிருந்துகொண்டு ஸம்ப்ரதாய ப்ரசார ப்ரவணராயிருந்துவருவது விச்வப்ரஸித்தம். ... ... ❋

26. ஸ்ரீமதுபயவே. கவிபூஷண. அத்தங்கி. குமாரதாதாசார்யஸ்வாமி.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமத். அத்தங்கி. குமாரதாதாசார்ய ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான வித்வன்மணி எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி ஸாஹித்ய க்ரந்தங்களில் நிகரற்ற மஹா வித்வான். ஸகல காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயங்களாயிருந்தன. வ்யாகரண வேதாந்த நிபுணர்.

கவித்வத்தில் மஹா நிபுணரென்பதை **'கவிபூஷணர்'** என்னும் இவருடைய பிருதமே விளக்கி நிற்கும். இந்த ஸ்வாமியால் இயற்றி வெளியிடப்பட்டிருக்கின்ற உத்தரராமசரித வியாக்கியானம் முதலான சில க்ரந்தங்களினால் இவர் சிறந்த க்ராந்திகர் என்பது தெற்றென விளங்கும். இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி நாற்பது வருஷங்களுக்கு மேல் ஆய்விட்டாலும் இவருடைய கீர்த்தி நிகரற்றது. இவருடைய பரிஸரத்தில் எப்போதும் பல வித்வான்கள் கூடியேயிருப்பார்கள். இவருடைய ஸகாசத்தில் ஏதாவது விஷய விசாரங்கள் நடந்துகொண்டேயிருக்கும். மஹாதனிகராகையால் ஸத்பாத்ர விநியோகங்களை விசேஷமாக நடத்திக்கொண்டேயிருப்பர். இவரிடத்தில் பரத்வம் அதிகமாயும் ஸௌலப்யம் குறைவாயுமிருக்குமென்று சிலர் சொல்லுவதுண்டு. இந்த ஸ்வாமியினுடைய க்ருபைக்கு அடியேன் பாத்திரமாகப் பெற்றவரலாற்றைச் சிறிது விஜ்ஞாபிக்கிறேன்.

ஸ்ரீ காதிஸ்வாமி விசேஷமாக வடநாட்டில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கையில் வல்லப மதஸ்தர்களோடு சிறிது விவாதம் ஸம்பவித்தது. பம்பாய் மாநகரில் "பூலேச்வர், படாமந்திர்" என்கிறவிடத்தில் மிகவும் ப்ரதிஷ்டிதராயிருந்த வல்லபாசாரியர் "பட்ட ஸ்ரீபலபத்ர சர்மா" என்பவரைக்கொண்டு 'ஸித்தாந்த ஸித்தாபகா' என்றொரு விசிஷ்டாத் வைதமத கண்டன க்ரந்தத்தை வெளியிட்டார். அந்த பண்டிதர் 'கவிகாவ்யரத்நாகரர்' என்று விருதுபெற்றவர். அவருடைய அந்த க்ரந்தத்திற்கு ஸ்ரீகாதிஸ்வாமி **'படபாநல:'** என்னும் பெயருள்ள மறுப்பு நூலையெழுதி வெளியிட்டிருந்தார். அதில் ஒரு வார்த்தை எழுதப்பட்டிருந்தது. (அதாவது) "இவர் வெறும் கவியேயொழிய சாஸ்த்ரஜ்ஞரல்ல ரென்பது இவர் வஹிக்கும் விருதினாலேயே ஸ்பஷ்டமாகிறது" என்று. அதைக் கடாக்ஷித்த அத்தங்கி ஸ்வாமி இந்த தூஷணம் கவிபூஷணரான தம்மையும் ஸ்பர்சிக்கிற தென்று கருதிச் சீற்றங்கொண்டு ஸ்ரீகாதிஸ்வாமியின் நூலைக் கண்டிக்க ஆசைகொண்டு, விஷயத்திலிறங்கிக் கண்டனமெழுதினால் அது நன்றாயிராதென்று கருதி அதிலிறங்காமல் வியாகரணப் பிழைகள் இருப்பதாக எடுத்துக்காட்டி தூஷித்து ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தார். அந்த ஸமயத்தில் ஸ்ரீ காதிஸ்வாமி வெகுதூர தேசத்தில் யாத்திரை செய்துகொண்டிருந்தார். மேலேசொன்ன அத்தங்கி ஸ்வாமியின் துண்டுப் பிரசுரத்தை அடியேன் பார்த்தவுடனே மிகவும் கொதிப்பு உண்டாயிற்று. அப்போது மஞ்ஜுபாஷிணீ பத்ரிகையை வெள்ளிக்கிழமை தோறும் நடத்திக்கொண்டிருக்கிறேன். அதில், கவிபூஷணருடைய தூஷணங்களுக்கெல்லாம் மறுவாய் திறக்க முடியாதபடிக்கு ஆணித் தரமான மறுப்புகளையெழுதி வெளியிட்டேன். வசனரூபமாகவன்றிக்கே ஐம்பது சுலோகங்களினால் மறுத்திட்டேன்.

ஸ்ரீகாதிஸ்வாமிக்கு மஞ்ஜுபாஷிணீ மூலமாய் இந்த பதிலுரை கிடைத்ததேயொழிய அத்தங்கி ஸ்வாமியின் துண்டுப்பிரசுரம் கிடைக்கவில்லை. காதிஸ்வாமி அடியேனது மறுப்புரையைக் கடாக்ஷித்தருளிப் பரமக்ருபை பொங்கி ஸ்ரீமுகம் ஸாதித்தருளினர். அது நிற்க, அத்தங்கி ஸ்வாமி அடியேனுடைய மறுப்புரைகளை மஞ்ஜுபாஷிணியில் கடாக்ஷித்தருளி, அது முதலாக விசேஷப்ரீதி செய்தருளி அடிக்கடி ஸந்திக்கவும் ஸம்பாஷிக்கவும் நியமித்திருந்தார். முதலில் என்னுடைய மறுப்புரையைப் பார்த்தவுடனே அவர்க்குக் கொதிப்பு உண்டாகி அதற்கு மறுப்பெழுதி வெளியிட வேணுமென்று

தோன்றியதாம். அவர்க்கு இரண்டு திருக்குமாரர்கள். இருவரும் நன்ருக வாசித்தவர்கள். ஒரு திருக்குமாரர் சிறந்த பண்டிதராயிருந்தார். இதற்கு நீ கண்டன மெழுதவேண்டிய தென்று அவர்க்கு நியமித்தருளினுராம். ஸ்ரீஉவே. வித்வான் அ. வீ. நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி அப்போது அந்த அத்தங்கி ஸ்வாமி திருமாளிகையிலேயே குடிவாழ்ந்து அவர்க்கு ப்ரேமபாத்ரமாயிருந்தபடியால் அவருக்கும் நியமித்திருந்தாராம். அவ்விருவரும் அடியே னுடைய மறுப்பு ச்லோகமாலிகையை ஆழ்ந்து பார்த்து அத்தங்கி ஸ்வாமியினிடம் சொன்னுர்களாம்:—"இதற்கு நாம் மறுப்பெழுதி வெளியிட்டால் மூன்ருநாளிலேயே அண்ணங்கராசாரியரிடமிருந்து சரமாரியாக பதில் வெளிவந்துவிடும்; அவர் சாஸ்த்ரீய ஸரணியிலேயே போயிருக்கிறபடியால் அடுத்தபடியாக நாம் விச்ராந்திபெற்று நிற்பதைவிட இப்போதே விச்ராந்தி கொள்வது நன்று" என்ருர்களாம். இதை பிறகு அத்தங்கி ஸ்வாமி திருவாக்கினுலேயே கேட்டறிந்தேனடியேன். ... ... ❋

27. ஸ்ரீமதுபயவே. அ. வீ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி.

கீழே ஸ்ரீமத் கவிபூஷண குமாரதாதாசார்ய ஸ்வாமி ப்ரஸ்தாவத்தில் இந்த ஸ்வாமி ப்ரஸக்தராயிருப்பதால் இவருடைய பெருமையும் இங்கே பேசலாகிறது. அகரம், வீரவல்லி, நரஸிம்ஹாசாரியரென்பது திருநாமம். ஆனுல் அ. வீ. என்றே ப்ரஸித்தர். இவர் பரமபதித்து இருபது ஸம்வத்ஸரமாகிறது. ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலையில் பல வாண்டுகள் வாசித்து வியாகரணத்தில் மஹாபாஷ்யாந்த வித்வந்மணியாக விளங்கினுர். உத்தீர்ணரான பிறகு திருவல்லிக்கேணியிலேயே நிரந்தர வாசமாக எழுந்தருளியிருந்து சென்னையில் ப்ரஸித்தமான ஆனந்தா ப்ரெஸ்ஸில் பரிசோதக பதவியில் அமர்ந்து அனேகஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை வெளியிட்டார். ஸ்ரீராமாயணத்தையும் ஸ்ரீபாக வதத்தையும் ஒரு பதமும் விடாமல் அக்ஷரச: தமிழில் மொழி பெயர்த்துப் பல ஸம்புடங் களாக இவர் வெளியிட்டிருப்பது தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ளது. மேலே ப்ரஸ் தாவித்த அத்தங்கி ஸ்வாமிக்கு தக்ஷிணபாஹுவாக விளங்கிவந்தார். திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீஉவே. சே. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அச்சிட்ட பகவத்விஷயம் [சே. கி. பதிப்பு என்றே ப்ரஸித்தமாகவுள்ளது] பெரும்பாலும் இந்த ஸ்வாமியினுல் பரிசோதிக்கப்பெற்றது. இந்த ஸ்வாமி காவ்ய நாடகாலங்காரங்களிலும் நிகரற்ற நிபுணராயிருந்ததோடு நிரவத்ய கத்யபத்யரசனைகளிலும் அதிஸமர்த்தராயிருந்தார். இவர் திருமலை திருப்பதி ப்ரதிவாதிபயங்கர ஸ்வாமிகளின் திருவடிஸம்பந்தம்பெற்றவராதலால் அடியேனுடைய திருத்தகப்பனுரிடத்தில் மிக ப்ராவண்யம் கொண்டிருந்தார். அப்போதே இவ்வருடைய பாண்டித்யத்தைத் திருத்தகப்பனுர் மிகவுங்கொண்டாடினது அடியேனுக்கு நினைவிருக்கிறது. இவர்க்கு ஜ்யேஷ்டப்ராதாவொருவரும் கநிஷ்ட ப்ராதாவும் சிறந்த வித்வானுயிருந்தார். கநிஷ்ட ப்ராதா ஸ்தலசயனம் ஸ்வாமியென்பவர் ஸாஹித்யப்ர வீணராயிருந்ததோடு க்ரமாந்தம் அதீதவேதராய் அடியேனுடைய வேதவேதாந்த வைஜயந்தீ பாடசாலையில் இருபது ஸம்வத்ஸரம் வேதாத்யாபகராக விளங்கினர். இவரினும் கனிஷ்டர் க்ருஷ்ணஸ்வாமியென்பவர் லௌகிகோத்யோகத்தில் ப்ரவருத்தராயிருந்தாலும் உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்களை நன்குணர்ந்தவராயிருந்தார். ஆக ஸஹோதரர்கள் நால்வரும் அடியேனுக்கு அடிக்கடி ஸ்மரணீயர்களாயிருந்து வருகிருர்கள். ... ❋